முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 22-07-2024

# இந்தியாவும் தமிழ்நாடும் குஜராத்தும்!

**த**மிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் வளமான வளர்ச்சியைப் பெற்று வருகிறது என்று 'தி இந்து' ஆங்கில நாளேடு ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டு இருந்தது. இதனை தமிழ்நாடு பா.ஜ.க. அண்ணாமலையால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நிதி ஆயோக் அறிக்கைப் படி தமிழ்நாடு பின் தங்கி இருக்கிறது என்று வாய்க்கு வந்தபடி ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்.

**ஆய்வு நோக்கமோ, அரசியல் ஞானமோ இருக்குமானால் 'தி இந்து' வெளியிட்ட அறிக்கையின் புள்ளிவிபரங்களை எடுத்து வைத்துக் கொண்டு அறிக்கை வெளியிட்டு இருக்க வேண்டும். தலையை மீறிய தற்குறித்தனம் இருப்பதால் அது அவருக்குள் நுழையாது. வழக்கம் போல தனது அவதூறு பாணியைக் கையில் எடுத்துள்ளார்.**

'தி இந்து' ஆங்கில நாளிதழ் தி.மு.க. நாளிதழா? இல்லை. அவர்களும் குத்துமதிப்பாக அதனைச் சொல்லவில்லை. 'நிதி ஆயோக்' அறிக்கையை வைத்துத்தான் அந்தக் கட்டுரையை எழுதி இருக்கிறார்கள்.

அனைத்து மனித வளக் குறியீட்டிலும் அகில இந்திய சராசரி எவ்வளவோ, அதைவிடக் கூடுதலாக தமிழ்நாடு இருக்கிறது என்பதுதான் 'தி இந்து' கட்டுரையின் உள்ளடக்கம் ஆகும்.

**★ வறுமையின்மையில் இந்திய விழுக்காடு 72 ஆக இருக்கும் போது தமிழ்நாடு 92 ஆக இருக்கிறது.**

**★ பட்டினி ஒழிப்பில் இந்திய விழுக்காடு 52 ஆக இருக்கும் போது தமிழ்நாடு 75 ஆக இருக்கிறது.**

**★ தரமான கல்வியை வழங்குவதில் இந்திய விழுக்காடு 61 ஆக இருக்கும் போது தமிழ்நாடு 76 ஆக இருக்கிறது.**

**★ பாலின சமத்துவத்தில் இந்திய விழுக்காடு 49 ஆக இருக்கும் போது தமிழ்நாடு 53 ஆக இருக்கிறது.**

**★ தூய்மையான குடிநீர் வழங்குவதில் இந்திய விழுக்காடு 89 ஆக இருக்கும் போது தமிழ்நாடு 90 ஆக இருக்கிறது.**

**★ குறைந்த விலை, சுத்தமான ஆற்றல் குறியீட்டில் இந்தியா 68 ஆக இருக்கும் போது தமிழ்நாடு 100 ஆக இருக்கிறது.**

**★ வேலைவாய்ப்பு, பொருளாதாரக் குறியீட்டில் இந்திய விழுக்காடு 68 ஆக இருக்கும் போது தமிழ்நாடு 81 ஆக இருக்கிறது.**

**★ தொழில், உட்கட்டமைப்பில் இந்திய விழுக்காடு 61 ஆக இருக்கும் போது தமிழ்நாடு 67 ஆக இருக்கிறது.**

**★ சமவாய்ப்பின்மை குறைப்பில் இந்திய விழுக்காடு 65 ஆக இருக்கும் போது தமிழ்நாடு 76 ஆக இருக்கிறது.**

**★ காலநிலை மாற்ற நடவடிக்கைகளில் இந்திய விழுக்காடு 67 ஆக இருக்கும் போது தமிழ்நாடு 81 ஆக இருக்கிறது.**

**★ அமைதி, நீதித்துறை செயல்பாட்டில் இந்திய விழுக்காடு 74 ஆக இருக்கும் போது தமிழ்நாடு 78 ஆக இருக்கிறது.**

**★ மருத்துவம், மக்கள் நல்வாழ்வு, உடல்நலத்தில் இந்திய விழுக்காடும், தமிழ்நாடு விழுக்காடும் ஒரே மாதிரி 77 ஆக இருக்கிறது.**

**★ பொறுப்பான நுகர்வு, உற்பத்தியிலும் இரண்டும் ஒரே மாதிரி 78 ஆக இருக்கிறது.**

இவை அனைத்தும் ஒன்றிய நிதி ஆயோக் அமைப்பு வெளியிட்டுள்ள 2023-24 ஆம் ஆண்டுக்கான நிலையான வளர்ச்சி இலக்கு குறியீட்டு எண்கள் ஆகும். இதில் அண்ணாமலை என்ன குறை கண்டார்? இது நிதி ஆயோக் அறிக்கை இல்லை என்று மறுக்கிறாரா?

இதில் உத்தரகாண்ட் மாநிலம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. கேரளா இரண்டாவது இடத்தையும், தமிழ்நாடு மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது. 100க்கு 78 புள்ளிகளை தமிழ்நாடு பெற்றுள்ளது.

**தரவரிசையில் மொத்த மதிப்பெண்ணில் முதலிடம், இரண்டாம் இடம், மூன்றாம் இடம் என்றுதான் சொல்வார்கள். அதைத்தான் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் 20 ஆயிரம் புக் அண்ணாமலை, '20 மார்க்' அண்ணாமலையைப் போல பேசுகிறார்.**

இந்தியாவில் இருக்கும் அனைத்து மாநிலங்களிலும் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது தமிழ்நாடு என்பது முதல் பெருமை. அகில இந்திய வளர்ச்சிக் குறியீடுகளை விட தமிழ்நாடு அதிகம் பெற்றுள்ளது என்பது இரண்டாவது பெருமை. இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

**'தி இந்து' செய்தியைப் பார்த்து தன் அடிவயிற்றில் அடித்துக் கொள்ளும் அண்ணாமலை, 'இந்துஸ்தான் டைம்ஸ்' வெளியிட்டுள்ள கட்டுரையைப் பார்த்தாரா எனத் தெரியவில்லை.**

**மாட்சிமை தாங்கிய நரேந்திர மோடியின் இந்தியாவில் 50 விழுக்காடு மக்களுக்குத்தான் மூன்று வேளையும் உணவு கிடைக்கிறது என்று 'இந்துஸ்தான் டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது. 21 மாநிலங்களில் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.**

2002 ஆம் ஆண்டு முதல் பா.ஜ.க.வின் கோட்டையாக இருக்கும், நரேந்திர மோடியால் 13 ஆண்டுகள் ஆளப்பட்ட குஜராத் மாநிலத்தில் 31 விழுக்காடு மக்களுக்கு மட்டுமே மூன்று வேளை உணவு கிடைக்கிறது என்கிறது அந்த அறிக்கை. இதே நிலைமையில்தான் பா.ஜ.க.வின் ஆளுகைக்கு உட்பட்ட ராஜஸ்தான் மாநிலமும் இருக்கிறது. 25 கோடிப் பேரை வறுமையில் இருந்து மீட்டு விட்டதாக பா.ஜ.க. அரசு தம்பட்டம் அடிக்கும் நிலையில்தான் இப்படி ஒரு செய்தி வெளியாகி இருக்கிறது.

இந்தப் பட்டியலில் பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலமான குஜராத் கடைசி இடத்தில் உள்ளது. பா.ஜ.க. ஆட்சி நடைபெறும் உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மராட்டியம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களும் கடைசி 5 இடத்தில் உள்ளன.

**'திராவிட மாடல்' ஆட்சி நடக்கும் தமிழ்நாட்டிலும் 'கம்யூனிஸ்ட்' மாடல் ஆட்சி நடக்கும் கேரளாவிலும் 98 விழுக்காடு மக்களுக்கு மூன்று வேளையும் உணவு கிடைப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது அந்தக் கட்டுரையில். தற்குறிகளுக்கு இதனை உணரும் நோக்கம் இருக்காது, இருக்காது.**

●●



கழகத் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களால் உருவாக்கி வளர்த்தெடுக்கப்பட்ட தி.மு.க. இளைஞர் அணி, 45ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்ததையொட்டி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.07.2024) அண்ணா அறிவாலயத்தில், கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.

## ஒன்றிய அரசு தாக்கல் செய்யும் பட்ஜெட்டில்

# தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுக!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜூலை 22 -**

**ஒன்றிய அரசு தாக்கல் செய்ய உள்ள 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் தமிழ்நாடு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்று முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் வலியுறுத்தியுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நாளை மறுநாள் (24.07.2024) 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. அதில், தமிழ்நாட்டு மக்களின் எதிர்ப்பார்ப்புகளை ஒன்றிய அரசு நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தி தமிழ்நாட்டு மக்களின் முக்கிய தேவைகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி உள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:



நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப் படவுள்ள பட்ஜெட் 2024-இல்

- **மூன்று ஆண்டுகளாக விடுவிக்கப் படாமல் இருக்கும் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான நிதி**
- **தாம்பரம் செங்கல்பட்டு இடையே மேம்பால விரைவுச் சாலைத் திட்டத்திற்கான ஒப்புதல்**
- **பத்தாண்டுகளாக வருமான வரிச் சுமை குறைக்கப்படும் என்ற நடுத்தரக் குடும்பங்களின் எதிர்பார்ப்பு**
- **கோவை மற்றும் மதுரை மெட்ரோ இரயில் திட்டங்களுக்கான ஒப்புதல்**
- **தமிழ்நாட்டில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள மற்றும் புதிய ரயில்வே திட்டங்களை விரைந்து செயல்படுத்திடப் போதிய நிதி ஒதுக்கீடு**
- **கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான செலவு வரம்பை உயர்த்துதல்**

உள்ளிட்ட தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை ஒன்றிய அரசு நிறைவு செய்யும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வலை தளப் பக்கத்தில் வலியுறுத்தியுள்ளார்.

## நாடாளுமன்ற

# மழைக்கால கூட்டத் தொடர்!

## இன்று தொடங்குகிறது!

புதுடெல்லி, ஜூலை 22–

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் இன்று ஜூலை 22ம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 12 வரை நடைபெற உள்ளது.

முதல்நாளிலேயே பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்பட உள்ளது. அதனைத் தொடர்ந்து, ஜூலை 23ம் தேதி ஒன்றிய நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது.

மேலும், இக்கூட்டத் தொடரில் நிதி மசோதா, பேரிடர் மேலாண்மை மசோதா, கொதிகலன்கள் மசோதா உள்ளிட்ட 6 மசோதாக்களை தாக்கல் செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கிடையே, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா நாடாளுமன்ற கூட்டத்தொடரின் நிகழ்ச்சி நிரல்களை தீர்மானிக்கும் அலுவல் ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளார்.

இக்குழுவில் பா.ஜ.க.வைச் சேர்ந்த அனுராக் சிங் தாக்கூர், நிஷிகாந்த் துபே, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கே.சுரேஷ், கௌரவ் கோகோய் ஆகியோரும், தி.மு.க. சார்பில் தயாநிதி மாறன், திரிணாமுல் காங்கிரஸ் சார்பில் சுதீப் பந்தோபாத்யாய், சிவசேனா சார்பில் அரவிந்த் சாவந்த் உள்ளிட்டவர்கள் இடம் பெற்றுள்ளனர்.

இந்நிலையில், நாடாளுமன்றக் கூட்டத் தொடரை சுமூகமாக நடத்துவது குறித்து விவாதிப்பதற்காக ஒன்றிய அரசு அழைப்பு விடுத்துள்ள அனைத்துக்கட்சிக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தலைமையில் இன்று காலை 11 மணிக்கு கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை தொடங்கும் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில், நீட் தேர்வு முறைகேடுகள், அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம், தொடர் ரயில் விபத்துக்கள் உள்ளிட்ட பிரச்சினைகளை இந்தியா கூட்டணிக் கட்சிகள் எழுப்ப உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

## சமூகநீதி மீது தாங்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்பு –

# ஒடுக்கப்பட்டோரை உயர்த்துவதற்கான முயற்சிகள் எங்கள் அனைவருக்கும் ஊக்கமாக அமைந்துள்ளது!

## அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பிறந்த நாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜூலை 22-**

**சமூகநீதியின் மீது தாங்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்பும், ஒடுக்கப்பட்டோரை உயர்த்துவதற்கான தங்களது முயற்சிகளும் எங்கள் அனைவருக்கும் ஊக்கமாக அமைந்துள்ளது என்று அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவர்களின் பிறந்த நாளையெட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**



இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் , தமது சமூக வலைதளப் பதிவில் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

இந்திய தேசிய காங்கிரசு கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்.

தங்களது வளமார்ந்த அனுபவமும், மதிநுட்பம் கொண்ட தலைமையும் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சியிலும் வெற்றியிலும் பெரும் பங்காற்றியுள்ளது. சமூகநீதியின் மீது தாங்கள் கொண் ள்ள அர்ப்பணிப்பும், ஒடுக்கப்பட்டோரை உயர்த்துவதற்கான தங்களது முயற்சிகளும் எங்கள் அனைவருக்கும் ஊக்கமாக அமைந்துள்ளது.

தங்கள் பயணம் தொடர்ந்து வெற்றியோடும் தாக்கம் செலுத்தும் பங்களிப்புகளுடனும் திகழட்டும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் . உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்2, வழித்தடம்3இல் பவானி என்று பெயரிடப்பட்ட சுரங்கம் தோண்டும் இயந்திரம் மூலம் ராயப்பேட்டை முதல் டாக்டர்.ராதாகிருஷ்ணன் சாலை வரை சுரங்கம் அமைக்கும் பணியை நேற்று (21.7.2024) ராயப்பேட்டையில் தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், சிறப்பு முயற்சிகள் துறை முதன்மைச் செயலாளர் ஹர் சகாய் மீனா, சிறப்பு திட்டச் செயலாக்கத்துறை அரசு செயலாளர் மருத்துவர். தாரேஸ் அஹமத், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குனர் (திட்டங்கள்) டி அர்ச்சுனன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.